**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.480/2014**

**<u>தேதி : 26.03.2026</u>**

**<u>(வா.சா.2) – திரு. செல்வராசு</u>**

**<u>சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

**<u>குறுக்கு விசாரணை :– (2 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில்)</u>**

1. சக்திவேல் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். நான் பாலாறு பொருந்தலாறு டேம் பகுதியில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் அப்பகுதியில் அ.தி.மு.க. கட்சியில் இருக்கிறேன் என்றும், கவுன்சிலராக இருந்தேன் என்றும் சொன்னால் சரிதான். நான் கவுன்சிலராக இருந்த காலக்கட்டத்தில் சக்திவேல் பாலசமுத்திரம் பேரூராட்சியின் துணைத்தலைவராக இருந்தார் என்றால் இல்லை, அவர் துணைத்தலைவராக ஆவதற்கும் முன்பாக நான் கவுன்சிலராக இருந்தேன்.

2. நானும் சக்திவேலும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சக்திவேல் தயார் செய்த வாக்குமூலத்தில் நான் கையொப்பம் மட்டும் செய்துள்ளேன் என்றால் நானும், சக்திவேலும் தயார் செய்தோம். நான் கிரைய உடன்படிக்கை செய்த வருடம் ஞாபகமில்லை, தேதி 23. வில்லங்கம் பார்த்த பின்புதான் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தினோம் என்றால் சரிதான். 08.02.2006 அன்று முத்துச்சாமி என்பவர் நான் கிரைய ஒப்பந்தம் செய்த சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

3. 30.05.2006 அன்று 2ம் பிரதிவாதி முத்துச்சாமியின் மனைவி குப்பாத்தாள் கிரையம் வாங்கிய விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கிரைய முன்பணத்தை வீரவேணியிடம் சக்திவேல் கொடுத்துவிட்டார் என கூறியுள்ளதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் அவ்வாறு தொகை கொடுத்ததை நான் நேரில் பார்த்தேன். நான் நேரில் பார்த்ததாக வழக்கிற்காக பொய்யாகச் சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. கிரைய

ஒப்பந்தத்தை எதற்காக ரத்து செய்தோம் என்றால் வீரவேணி பேசப்பட்ட கிரையத் தொகையான ரூ.12,00,000/−க்கு பதில் ரூ.16,00,000/− ஆக கேட்டதால் என்னால் மேற்படி தொகையை கொடுக்க முடியாது என்பதால் கிரைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. மேற்படி விபரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

4. சக்திவேலுக்கு ஆதரவாக ஆவணங்களை உற்பத்தி செய்வதற்காகத்தான் கிரைய ஒப்பந்தம் செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. வீரவேணியுடன்தான் நான் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரிதான். மோசடியாக சக்திவேல் பொது அதிகார ஆவணம் ஏற்படுத்திக் கொண்டார் என்றும், அதற்கு வலுச்சேர்ப்பதற்காக கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. எல்லா விபரமும் தெரிந்ததால்தான் நான் கிரைய உடன்படிக்கை ரத்துச் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. வீரவேணியின் கையொப்பத்தை சக்திவேல் மோசடியாக செல் ரசீதில் உற்பத்தி செய்து அது சம்பந்தமாக மாவட்ட குற்றப்பிரிவில் குற்ற எண்.72/2015 என வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது.

5. வா.சா.ஆ.10 செல் ரசீதில் யாருக்கு, யார் பணம் கொடுக்கிறார்கள் என்ற விபரம் இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.10 செல் ரசீதும் சக்திவேல் தயார் செய்தது என்று சொன்னால் சரியல்ல. சக்திவேலுக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. குப்பாத்தாள்தான் தாவாச்சொத்தில் தற்போது விவசாயம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வீரவேணி பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்த விபரம் எனக்குத் தெரியும். மேற்படி பொது அதிகார ஆவணத்தில் சக்திவேல் மோசடியாக உற்பத்தி செய்தார் என்ற விபரத்தை சொல்லி ரத்து செய்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது.

6. நானும், சக்திவேலும் கிரைய உடன்படிக்கையை ரத்து செய்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். கிரைய உடன்படிக்கை ஆவணம் மற்றும் கிரைய உடன்படிக்கை ரத்து ஆவணம் ஆகியவற்றை

**தாக்கல் செய்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2006ம் வருடம் கிரையப் பத்திரம் ஏற்பட்டுள்ள நிலையில் நான் கிரைய ஒப்பந்தம் செய்தது தவறு என்று சொன்னால் வீரவேணி சொன்னதை நம்பி நான் கிரைய ஒப்பந்தம் செய்தேன். நானும் சக்திவேலும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாகச் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.**

**(3,4,5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2026.03.26 14:59:12 +0530

Additional Sub Judge,
Palani.